[1981 ஆகஸ்ட் 24

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்கு பொது மாற்றம் இல்லை என்று நான் சொல்லவில்லை. இப்போது நிர்வாகத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துக்களிலிருந்து கல்வித் துறை அதிகாரிகள் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதிலேயே பல பிரச்னைகள் இருக்கின்றன. அவர்களுடைய சம்பள விகிதங்களிலிருந்து சர்வீஸ் ரெஜிஸ்டர்கள் வரை பல வேலைகள் செய்யப்பட வேண்டியிருக்கிறது. ஆசிரியர்களுக்கு ஒன்றியங்களிலிருந்து ஒன்றியங்கள் என்பது மத்திரம் அல்லாமல், மாநில அளவிலே கூட மாற்றங்கள் தரக்கூடிய ஏற்பாடுகளைச் செய்ய யோசித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, ஆசிரியர்களுக்கு எல்லாவிதமான முறையிலும் உதவிகள் செய்யத் தயாராக இருக்கிறோம். ஆனாலும் நிர்வாக முறையில் பல பணிகள் செய்யப்பட வேண்டியிருக்கிறது. அதிலேயே பல பிரச்னைகள் சங்கடங்கள் இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளை, நிர்வாக மாற்றம் சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகளை சரி செய்து விட்ட பிறகு, மாறுதல்களை ஏற்படுத்த யோசிக்கப்படும். நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய தெளிவான விளக்கத்திற்கு நன்றி. அமைச்சர் அவர்கள் எவ்வளவு விரைவாக முடியுமோ, அவ்வளவு விரைவாக மாறுதல்களுக்கான உத்தரவை அனுப்புவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, நிர்வாக மாறுதலின் காரணமாக, பல பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளெல்லாம் சரிசெய்த பிறகுதான் இந்தப் பிரச்சினையைப் பார்க்க முடியும். ஆசிரியர்களிடமிருந்து அப்படிப்பட்ட கோரிக்கைகள் வந்தால் அதன்மீது பரிசிலனை செய்யலாம். ஆனால், நான் அழுத்தமாகச் சொல்கிறேன். இதுபற்றி ஆசிரியர்களின் சங்கங்களிடமிருந்து எங்களிடத்தில் எந்த ஒரு கோரிக்கையும் இதுவரையில் வரவில்லை.

ஆ. பட்டுக்கோட்டை வட்டங்களில் பாசனத்திற்கு தண்ணீர் தட்டுப்பாடு.

திரு. மு. அம்பிகாபதி: துணைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம் கல்லணைக் கால்வாய் மற்றும் சி.எம்.பி. பாசனப் பகுதிகளான மன்னார்குடி, பட்டுக்கோட்டை வட்டங்களில் போதிய தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் அவதிப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1981 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் நான் கீழ்க் கண்ட விவர அறிக்கை ஒன்றினை வைக்கிறேன்.

அறிக்கை.

இந்த ஆண்டு மேட்டூர் நீர்த் தேக்கம் பாசனத்திற்காக 11—7—1981 அன்று திறந்து விடப்பட்டது. 14—7—1981 அன்று நீர் கல்லணையை அடைந்தது.

தஞ்சாவூர், மன்னார்குடி, பட்டுக்கோட்டை வட்டங்களில், காவிரி மேட்டூர் திட்டத்தின் ஆயக்கட்டிலுள்ள நிலங்களுக்கு கல்லணைக் கால்வாயும், வடவாறு பிரிவுக்கக் கால்வாயும் பாசனமளிக்கின்றன. ஜூலை மாதம் நீர் வரத்து மிகக் குறைவாகவே இருந்ததால், தண்ணீர் விடுவதில் சிக்கனத்தைக் கடைப் பிடிக்க நேரிட்டது. ஆகஸ்டு மாதம் 5-ந் தேதியிலிருந்து நீர் வரத்து அதிகமாகி, 21—8—1981 அன்று மேட்டூர் அணை முழு நீர் மட்டத்தை எட்டியது. ஆகவே நீர் விடுவதும் படிப்படியாக அதிகரிக்கப்பட்டு 12—8—1981ந் தேதி முதல், வினாடிக்கு 30,000 கியூசெக்ஸ் விதம் நீர் விடப்படுகிறது.

கல்லணைக் கால்வாயில் 11—8—1981 முதலும், பெண்ணாற்றில் 15—8—1981 முதலும் முழு அளவு நீர் விடப்படுகிறது. தேவையான நீர், தற்போது எல்லாப் பகுதிகளுக்கும் கிடைக்கிறது.

20—7—1981 முதல் தஞ்சாவூர் கண்காணிப்பு பொறியாளர் அலுவலகத்தில், நீர் பற்றாக்குறை போன்ற புகார்களை உடனுக்குடன் கவனித்து தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக தனிக் குழு ஒன்று பணியாற்றி வருகிறது.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப் பார்க்கிறபோது இந்தசபையிலே இருக்கிறவர்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். மேட்டூர் அணை நிரம்பி வழிகிறது. இரண்டு முறை வெள்ள அபாய அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் பட்டுக்கோட்டை, மன்னார்குடி தாலுக்காக்களில் வாலாஜாக் கோட்டை, கிளிஞ்சியூர், இலவனூர், ராதாநரசிம்மபுரம், இடையர்நத்தம் போன்ற நூற்றுக் கணக்கான கிராமங்களுக்கு இன்னும் தண்ணீர் போய்ச் சேரவில்லை. இன்று காலை வரை போய்ச்சேரவில்லை. நாளை வரைப் போகாது. என்ன காரணம்? அங்கிருக்கக்கூடிய வாய்க்கால்கள் அகலமாக இல்லை. அவைகளில் கொள்ளளவு குறைவு. தண்ணீரின் வரத்தை விட விவசாயப் பகுதிகள் அதிகம். ஒரு போக சாகுபடி இரண்டு போகச் சாகுபடியாக மாறியிருக்கிறது. இந்த நிலையில் அந்தப் பகுதி விவசாயிகளுக்குத் தேவையான தண்ணீர் கிடைக்கவில்லை. என்பது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். எனவே சிறப்புக் கவனம்

மூலம் அந்தப் பகுதி வாய்க்கால்களை அகலப்படுத்தி விரிவுபடுத்தி ஒரு தனித்திட்டத்தை சிறப்புத் திட்டத்தை அரசாங்கம் கொண்டு வருவதற்கு முன்வருமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : கால்வாய் கொள் ளளவிற்குத் தக்கபடிதான் நீர் கொடுக்கமுடியும், அதைத் தாண்டிக் கொடுக்க முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவர். ஆனால் இப்போது அவர்கள் சொல்கிற பிரச்சினை வேறு. அதைத் தனியாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவார்களேயானால் அது குறித்து அரசாங்கம் ஆய்வு செய்யும்.

திரு. மு. அம்பிகாபதி : தற்போது தனி அதிகாரிகள் மூலம் அந்த வாய்க்கால்களில் அதிகமான தண்ணீர் விடுவதற்கு சிறப்புத் திட்டத்தை, தனி கவனத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ள முன் வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அதுதான் அரசின் கவனத்திற்கு இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிறது. அரசாங் கம் கவனத்தைச் செலுத்தும்.

## 6. அறிக்கை அளித்தல்.

### பொதுக் கணக்குக் குழு

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, *1970–71, 1971–72* மற்றும் *1972–73* ஆம் ஆண்டுகளுக்கான வாக்களிக்கப்பெற்ற மானியக் கோரிக்கைகளுக்கும், சட்டப் பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் கூடுதலாகச் செலவழித்த தொகைகள் பற்றிய குழுவின் அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் ஒன்பதாவது (ஏழாவது சட்ட மன்றப் பேரவை) அறிக்கையை அளிக்கிறேன்.

## 7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

அ. நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்தலும்) மூன்றாவது திருத்தச் சட்ட முன்வடிவு, தமிழ்நாடு 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்தலும்) மூன்றாவது திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோரு கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்றி, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS